**எண்.5/1/1/9/பதிவாளர்/கடன் /C2/2023 /1**

புதுச்சேரி அரசு

கூட்டுறவுத் துறை

புதுச்சேரி 5-1-2024

**<u>1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு எண் 81ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட செயல்முறை ஆணை.</u>**

முன்னிலை : திரு. S.யஷ்வந்தய்யா
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்

பொருள் : கடன் பிரிவு- மூவர் குழுக்கள் நிர்வகிக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவால் நிர்வாகம் செய்வது – 1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவுச் சங்கங்களில் சட்டப் பிரிவு எண் 81ன் கீழ் செயல்முறை ஆணை பிறப்பித்தல்.

பார்வை : 19.9.2002 தேதியிட்ட இவ்வலுவலக சுற்றறிக்கை
எண்.5/1/1/16/RCS/CR/C2/90/V.IV/200.

******

பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கையில், 1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களில் சட்டப் பிரிவு 33 உட்பிரிவு (1)ன் கீழ் நியமிக்கப்பட்ட மூவர் குழு கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக சங்க நிதிநிலைமையை பாதிக்கும் எந்தவொரு கொள்கை தொடர்பான முடிவுகளையும் பதிவாளரின் முன் அனுமதியின்றி சங்க மூவர் குழு எடுக்கக் கூடாது எனவும் மற்றும் பதிவாளரின் முன் அனுமதியின்றி சங்கத்தில் எந்தவொரு நபரையும் பணி அமர்த்தவோ / பணி நீக்கவோ கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. மேலும் எந்தவொரு நபரையும் தினக்கூலி / தற்காலிக அடிப்படையில் முன்னனுமதியின்றி பணியில் அமர்த்தக்கூடாது எனவும் மேலும் பணிபுரியும் நபர்களை எக்காரணம் கொண்டும் முன் அனுமதியின்றி பணி நிரந்தரம் செய்யக்கூடாது எனவும் சென்னை உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

3. இருப்பினும் சில தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை நிர்வகிக்கும் மூவர் குழு, பதிவாளரின் முன் அனுமதியின்றி ஆட்களை பணியமர்த்துவதும் பணியமர்த்திய பின்னர் பதிவாளரின் பின் அனுமதி வேண்டி பிரேரணை சமர்ப்பிப்பதும் இவ்வலுவலகக் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இச்செயல் சங்க நிதிநிலைமையை பாதித்து சங்கம் மேலும் நலிவடைய செய்வது மட்டுமல்லாமல் பதிவாளரின் வழிகாட்டுதல்களை மீறிய செயல்களாகும். மேலும், இது சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான செயல் ஆகும். எனவே முன் அனுமதியின்றி யாரையும் பணியமர்த்தவோ, பணிநிரந்தரம் செய்யவோ கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது.

..2/-

4. மேலும் மத்திய கூட்டுறவு அமைச்சகம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களாக மாற்றி பல புதிய திட்டங்களை செயல்படுத்த சங்கங்களை ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுக்களாலேயே நிர்வகிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

5. எனவே, சங்கங்களின் நலம் கருதி, மூவர் குழுக்களால் நிர்வகிக்கப்படும் சங்கங்களின் நிர்வாகக்குழுவிற்கு புதிய இயக்குநர்களை ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்க ஏதுவாக தக்க நடவடிக்கை மேற்க்கொள்ளுமாறும் **புதிய இயக்குநர் குழு எதிர்வரும் 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் பதவி ஏற்கும் வகையில் தேர்தல் அட்டவணையை உடனே தயார் செய்து இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும்** 1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களில் சட்டப் பிரிவு எண் 81ன் கீழ் செயல்முறை ஆணையாக பிறப்பிக்கப்படுகிறது.

6. இச்செயல்முறை ஆணையை தவறாமல் அனைத்து பிரதம கூட்டுறவு விவசாய கடன் சங்கங்கள் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

7. இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டதற்கான ஏற்பளிப்பை உடனே அனுப்ப வேண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES ★ PUDUCHERRY

(S. யஷ்வந்தய்யா)
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்

415

பெறுநர்.
தலைவர்
இணைப்பில் கண்டுள்ளபடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்
புதுச்சேரி / காரைக்கால்.

நகல் பெறுபவர்

1. துணை பதிவாளர் (காரைக்கால்)
2. மேலாண் இயக்குனர்
   புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கி
   புதுச்சேரி.
3. Web Editor
4. இருப்பு கோப்பு 2024.

# இணைப்பு

மூவர் குழுவால் நிர்வகிக்கப்படும் சங்கங்களின் பட்டியல்

| எண் | சங்கத்தின் பெயர் | பதிவு எண் |
|---|---|---|
| | **பாண்டிச்சேரி பிரதேசம்** | |
| 1 | அரியாங்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 22 |
| 2 | காட்டேரிக்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 120 |
| 3 | தவளக்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 111 |
| 4 | T-பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 43 |
| 5 | கிருமாம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 51 |
| 6 | கரையாம்புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 18 |
| 7 | பொறையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 133 |
| 8 | பாகூர் தொடக்க விவசாய சேவை கூட்டுறவு சங்கம் | 20 |
| 9 | சந்தைபுதுகுப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 135 |
| 10 | செட்டிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 101 |
| 11 | மொளப்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 138 |
| 12 | காலாப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 96 |
| 13 | கீழ்அகரகாரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 89 |
| 14 | பி. எஸ் பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 123 |
| | **காரைக்கால் பிரதேசம்** | |
| 1 | அறிஞர் அண்ணா T.R.பட்டினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 116 |
| 2 | காரைக்கோவில்பத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 139 |
| 3 | நெடுங்காடு விவசாய சேவை கூட்டுறவு சங்கம் | 72 |
| 4 | வரிச்சிக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 91 |
| 5 | திருநள்ளார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 38 |